Date :01.08.2018

Name : Viju

Father's Name :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல் விசாரணை -

நான் காட்டாத்துறையில் வசித்து வருகிறேன். நான் வாகன புரோக்கராக உள்ளேன். எதிரிகளைத் தெரியும். 1ம் எதிரி ஆல்பர்ட்டை சில ஆண்டுகளுக்கு முன்பு போலீசார் பிடித்துச் சென்றார்கள். நான் தான் தகவல் சொன்னேன் என்று எதிரிகளுக்கு என் மீது மனவருத்தம் ஏற்பட்டது. நான் எனது நண்பர்களுடன் திருநெல்வேலி சென்றுவிட்டு 23.8.2012 அன்று இரவு 10.30 மணிக்கு சுவாமியார்மடம் பஸ்டாப்பில் இறங்கினோம். அருகில் உள்ள திரிஸ்டார் ஹோட்டலில் சாப்பிட போனோம். எனது நண்பர் ஜஸ்டஸ் ராஜகுமார், சதீஷ்குமார் ஆகியோருடன் நான் உள்ளே போக போனோம். எதிரிகள் மூவரும் கடைக்குள் இருந்தார்கள். என்னை பார்த்ததும் நீ என்னை போலீசில் காட்டிக்கொடுத்தாயா உன்னால் எனக்கு ரூ.50,000/- செலவானது என்று சொல்லி தகராறு செய்தார்கள். 1ம் எதிரி ஆல்பர்ட் நீ செத்து தொலைந்து போ என்று சொல்லி வெட்டுக்கத்தியால் என்னை வெட்ட வந்தார். நான் கையால் தடுத்தேன். வெட்டுக்கத்தி கீழே விழுந்தது. பின்னர் 1ம் எதிரி ஆர்பர்ட்டும், 3ம் எதிரி முருகனும் என்னை இறுக்க பிடித்துக் கொண்டார்கள். இவனை கொல்லாமல் விடக்கூடாது என்று சொல்லி 2ம் எதிரி ராஜேஷ் வெட்டுக்கத்தி எடுத்து முன்பக்க தலையில் வெட்டினார். நான் நிலைத்தடுமாறி கீழே விழுந்தேன். எனது கழுத்தில் கிடந்த 2 பவுன் தங்க செயினை 1ம் எதிரி ஆல்பர்ட் பிடுங்கிச் சென்று கேஸ் செலவிற்கு ஆகும் என்று சொல்லி கொண்டு சென்றார். எதிரிகள் மூவரும் அங்கிருந்து ஒரு எமஹா பைக்கில் தப்பிச் சென்று விட்டார்கள். அதன் பதிவு எண் ற்றி என் 74 எக்ஸ் 4496 ஆகும். அங்கு சத்தம் கேட்டு ஆட்கள் கூடிவிட்டார்கள். எதிரிகள் பயந்து ஓடிவிட்டார்கள். நண்பர் ரமேஷ் உதவியுடன் அருகில் உள்ள ரத்னா

மருத்துவமனைக்குச் சென்றேன். சுமார் 8 நாட்கள் வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். மறுநாள் தக்கலை போலீசார் நடந்த சம்பவம் குறித்து காலை 7 மணிக்கு புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை - இல்லை

மறு விசாரணை - இல்லை

Dictated and typed in open court, read over to the witness and admitted to be correct on Wednesday the 1st day of August, 2018.

**Assistant Sessions Judge,**
**Padmanabhapuram.**